2005 ஏப்ரல் 11]

அவைகுறித்து அமைச்சர் அவர்கள்—இந்த அரசு—ஆய்வு செய்திருக்கிறதா? அப்படிக் கட்டப்படாமல் இருக்கின்ற கோயில்களைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்த மாவட்டத்தில், எந்தப் பகுதியில்* basement*–உடன் அந்தப் திருப்பணிகள் செய்யப்பட்டு, வேலை நடைபெறாமல் இருக்கின்றன என்பதையும், அது அறநிலையத் துறையினுடைய பொறுப்பிலே இருக்கிறதா அல்லது தனியார் ஆலயமா என்பதையும் சொல்வார்களேயானால், கூடிய விரைவில் நாளை மறுதினமே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 327, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

327—

திண்காரை தளம்

***73172—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 5-வது வட்டத்தில் செயல்படும் சத்துணவுக் கூடம், அங்கன்வாடி மையத்தின் கூரைக் கட்டடத்தை மாற்றி திண்காரை தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 5-வது வட்டத்தில் செயல்படும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் எதுவும் கூரைக் கட்டடங்களில் இயங்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, துரித நடவடிக்கையினால் இன்றைக்கு மாநகராட்சி சார்பிலே மாத்திரம் ரூபாய் 14 கோடி செலவிலே பல்வேறு அங்கன்வாடிகள்*

மற்றும் சத்துணவு மையங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மேலும் இந்த சிமென்ட் கூரைகளினாலான சத்துணவுக் கூடங்கள் அதிக அளவிலே இருக்கின்றன. அதற்கு ஒரு நிரந்தர தீர்வாக நடப்பாண்டில் எத்தனை சத்துணவுக் கூடங்கள் கான்கிரீட் தளங்களாக மாற்றப்பட, ஆய்வில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடத்தில் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் மொத்தம் 51 இயங்கி வருகின்றன. இம்மையங்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் 16 மையங்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 35 மையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றின்கீழ் 17,724 நபர்கள் பயன் பெறுகின்றனர். இத்தொகுதியில் 5–வது வட்டத்தில் ஒரு சத்துணவு மையம் இயங்கி வருகின்றது. அதுவும் கான்கிரீட் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில், 5–வது வட்டத்தில் மொத்தம் 17 அங்கன்வாடி மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் அனைத்தும், கான்கிரீட் கட்டடங்கள் மற்றும் கல்நார் கூரைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மேற்கண்ட சத்துணவு மையங்களோ, அல்லது அங்கன்வாடி மையங்களோ கூரைக் கட்டடங்களில் இயங்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களில் இயங்குகின்ற சத்துணவுக் கூடங்கள் மற்றும் அங்கான்வாடிகளில் அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப, தற்போது மின்சார வசதி முழுவதுமாக பள்ளிக்கூடங்களிலே இயங்குகின்ற அங்கன்வாடிகள், சத்துணவுக் கூடங்களுக்கு செய்து தரப்பட்டிருக்கின்றன. தனி இடங்களில் இயங்குகின்ற அங்கன்வாடிகளில் இப்படிப்பட்ட மின்சார வசதி செய்து தரப்பட்டு அந்த மின்சாரத்திற்குண்டான மாதாந்திரக் கட்டணத்தை யார் கட்டுவது என்ற சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்து, இந்த மின்சாரக் கட்டணத்தை சமூக நலத் துறை வாயிலாகவோ அல்லது மாநகராட்சியின் வாயிலாகவோ

2005 ஏப்ரல் 11]

கட்டுவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ள முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 328, திரு. அ. நடராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

328—

ஆரம்ப சுகாதார நிலையம்

***40296—திரு. அ. நடராஜன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, காஞ்சிவாய் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், காஞ்சிவாய் கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இப்போது இல்லை.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் உலகத் தரத்தை மிஞ்சும் வகையிலே, நிர்வாகம் நடத்திடும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். குத்தாலம் ஒன்றியம், காஞ்சிவாய் கிராமம், உள் கிராமம் ஆகும். அந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமேயானால் 3, 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, அதன்பிறகு பேருந்தைப் பிடித்துச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு, காஞ்சிவாய் கிராமத்திற்கு, ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முடியாவிட்டாலும், துணைச் சுகாதார நிலையம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.